Arimā Nōkku

# அரிமா நோக்கு

5:2 ஜூலை 2011

ரூ.20

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
5:2 ஜூலை 2011

மறைந்த மொழிக்கு அகராதி
- வ. ஜெயதேவன் 03
மொழிப்பாடம் விழையும் மொழியியல் நோக்கு 05
- வீ. மலர்க்கொடி
நான்மணிக்கடிக்கை அழைப் பழகும் அறக் கருத்துக்களும்
- பழி. முத்துவீரப்பன் 08
செவ்வியல் தோற்றமும் செவ்வியல் மரபும் (தமிழ்-கிரேக்கம் ஒப்பீடு)
- செ. சாரதாம்பாள் 13
சிற்றம்பலக் கோவை: பழைய உரை
- இரா குமரவேலன் 20
The difficulty of imparting a knowledge of the deontic modality with related negation in English (to the Indian learners) 34
- S.A. Harish Rajaraman
செவ்வியல் அறஇலக்கியக் கோட்பாடுகள்
- சு. மாதவன் 37
Quantifying Morphological Aspects of Language (w.r.t Verb) for the purpose of Testing
- Ms.G.Usha Nandini 45
தற்காலத் தமிழில் வினையடைகள்: ஓர் ஆய்வு
- தி. கி. இரகுநாதன் 48
தந்தை பெரியாரின் மனித சமத்துவக் கோட்பாடு
- த. ஜெயக்குமார் 54
Urdu in Kerala
- M.H. Hashim 56
பெரியாரும் கம்யூனிஸ்ட் கட்சியும்
- எஸ். நாராயணமூர்த்தி59
மற்றும்
நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## மரண தண்டனைக்கு - மரணதண்டனை

குற்றங்கள் புரியாத சமுதாயத்தை உருவாக்கி மானுடம் மனநிறைவோடு வாழவேண்டும் என்பதற்காகவே குற்றங்களுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. குற்றங்கள் ஏற்படும் முன் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தண்டனைகள் என்னும் அச்சுறுத்தல்கள் எல்லாச் சமுதாயங்களிலும் உண்டு. குற்றம் புரிந்தவன் மீளவும் குற்றம் புரியக்கூடாது என்பதோடு அவனைப் பார்த்து மற்றவர்களும் குற்றங்கள் புரிவதினின்றும் விரும்பினும் விரும்பாவிடினும் விலகிநிற்க வேண்டும் என்னும் உட்கிடக்கை கொண்டனவே இவ்வச்சுறுத்தல்கள்.

பல்லுக்குப்பல், கண்ணுக்குக்கண் என்னும் பதில் குற்றங்கள் பண்பாடும் நாகரிகமும் உள்ள எந்தச் சமுதாயத்தாலும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. பதில் குற்றங்கள் குற்றங்களை நீக்கிவிடும் வல்லிமை உடையவை என்றால் முதல் கொலைத் தண்டனையோடு-நின்றிருக்க வேண்டிய கொலைக் குற்றங்கள்- தொடர்ந்து நடந்து வருவானேன்? கொலை செய்பவன் அல்லது கொலையில் தொடர்பு கொண்டவன் - குற்றவாளி, கொலைகாரன் என்று தான் முத்திரை குத்தப்படுவதை ஏற்பதில் விருப்பமுடையவனாக இருப்பானா?

நாட்டு விடுதலைக்காக, சமூகத்தளை அறுப்புக்காகத் தவிர்க்க முடியாத கொலை நிகழ்வில் தொடர்புறுத்தப் பட்டவனை - உலகம் கொலையாளி என்று கருதுவது கிடையாது. அரசியல் ஆட்சி அதிகாரங்களைக் கையில் வைத்துக் கொண்டு போர் நிகழ்வில் தொடர்பில்லா மக்களைக் கொன்று குவிப்பவனை மனச்சான்று படைத்த வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.

கொலைச் செயல் கொடுமையானது, தண்டிக்கத்தக்க குற்றமானது என்று, அதனைப் புரிந்தவனுக்கு மரணதண்டனை விதிப்பதும் நிறை வேற்றுவதும் அக்குற்றவாளி செய்த அதே கொலைச் செயல் தவிர வேறு என்ன? குற்றம் செய்விருப்பத்தின்-விளைவு தான் கொலையெனில், அதற்கு மரணதண்டனை என்பது நாகரிக வழி முறையிலான நீதி வழங்கு நெறியாகாது. குற்றத்திற்குத் தீர்வு அதே அளவான கொடுமையான குற்றமெனில், அக்குற்றத்தை எப்படித் தண்டிப்பது?

ஒரு குடிமகனின் உயிரைப்பறிக்கும் உரிமை ஒருதனி மனிதனுக்கு இல்லை எனில், சட்டத்தையும் நீதியையும் பயன்படுத்தி அதே குற்றத்தைப் புரிய ஒரு சமூகத்திற்கோ - அரசுக்கோ என்ன உரிமை இருக்கிறது?

இன்று உலகில் 139 நாடுகளில் மரண தண்டனை நீக்கப்பட்டு விட்டது. மரணதண்டனையை வைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவில் 15 மாநிலங்களில் மரணதண்டனை நீக்கப்பட்டு விட்டது.

ஆப்ரகாம்லிங்கன், கென்னடி, இந்திராகாந்தி என்று வரும் பட்டியலில்-இவர்களைக் கொன்றவர்கள் யாரென்று உண்மையாக நமக்குத் தெரியுமா? குற்றவாளிகள் என்று கைது செய்யப்பட்டவர்கள், விசாரிக்கப் பட்டவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள் தாம் குற்றவாளிகளா? வேறு யார் யாருமா? குற்றத் தொடர்புடையவர் பத்துப் பேர் தப்புவதைக் கூடப் பொருட்படுத்த வேண்டாம்; ஆனால் குற்றமே செய்யாத ஒருவன் தலையைக் கொய்வதைப் பொருட்படுத்தாமல் இருப்பதெப்படி?

புத்தபிரானும், மகாவீரரும், காந்தியண்ணலும் பிறந்த நம் நாட்டில் மரணதண்டனை இன்னும் நீக்கப்படவில்லை என்பது நம்மை வெட்கத்திலும் வேதனையிலும் தலைகுனிய வைக்கிறது.

♦


*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்


## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/— | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/— | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/— | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/— | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு- அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 15, 000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 10, 000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 3, 000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 1, 500 |

***தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.***


அரிமா நோக்கு
4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com
செல்: 9380626448